








We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## பிப்ரவரி - 2019

*We Are Here..!! To Guide You..!!*










# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (Current Affairs)

## பிப்ரவரி - 23.02.2019

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தேசிய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- நியமனங்கள்











## தேசிய நிகழ்வுகள்

- தொடக்கக் கல்வி ஆசியா(2019) மாநாடானது **ஜெய்ப்பூரில்**( இராஜஸ்தான்) 2 நாட்கள் நடைபெற்றது.
    - இந்த நிகழ்ச்சியானது கல்வி தொடர்பான ஆராய்ச்சி, குழந்தைகளின் தொடக்க நிலைக் கல்வியின் மேம்பாட்டிற்கான கல்வி மற்றும் கொள்கைகள் ஆகியவற்றின் மீது கவனத்தைச் செலுத்துகிறது.
    - **"நமது குழந்தைகள், நமது எதிர் காலம்" என்பது இந்த நிகழ்ச்சியின் குறிக்கோளாகும்.**

## உலக நிகழ்வுகள்

- புல்வாமா தாக்குதலை தொடர்ந்து, பாகிஸ்தானிற்கு அளிக்கப்பட்டு வந்த ரூ.7,100 கோடி நிதி உதவியை அமெரிக்கா நிறுத்தியுள்ளது.

- நிலவில் ஆய்வு மேற்கொள்வதற்காக, **இஸ்ரேலின் ஸ்பேஸ்-ஐஎல்** என்ற தனியார் அமைப்பால் உருவாக்கப்பட்ட **பெரஷீத் விண்கலம், அமெரிக்காவின் ஃபுளோரிடா மாகாணத்திலிருந்து ஃபால்கன் 9 என்ற ராக்கெட் மூலம் விண்ணில் செலுத்தப்பட்டது.**

## விளையாட்டு நிகழ்வுகள்

- சர்வதேச ஹாக்கிப் போட்டிகளில் சிறந்து விளையாடும் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியோர்களுக்கு சர்வதேச ஹாக்கி கூட்டமைப்பின் சார்பில் (International Hockey Federation – FIH) வருடாந்திர விருது வழங்கப்பட்டது.
    - FIH வீரர்களுக்கான ஆண்டு விருதானது **1998ம்** ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகின்றது.
    - FIH இளம் வீரருக்கான ஆண்டு விருது **2001ம்** ஆண்டு உருவாக்கப்பட்டது.
    - 2019ம் ஆண்டின் சிறந்த ஆண் வீரர் - **வன் டோரென்** (பெல்ஜியம்). தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக இவர் இந்த விருதைப் பெறுகிறார்.

We Shine Academy™

- 2019ம் ஆண்டின் சிறந்த பெண் வீரர் - **ஏவ டி கோடி** (நெதர்லாந்து)

- கௌஹாத்தியில் நடைபெற்ற 2019 யுனெக்ஸ் - சன்ரைஸின் மூத்தோருக்கான **83-வது தேசிய பேட்மிண்டன்,** (இறகுப் பந்து) ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவில் சாம்பியன்ஷிப் பட்டத்தை சவ்ரப் வர்மா வென்றுள்ளார்.

- 19 வயதுக்குட்பட்டோர் யூத் டெஸ்ட் ஆட்டத்தில், இந்தியா மற்றும் தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான **யூத் டெஸ்ட்** திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. இதில் **9 விக்கெட் வித்தியாசத்தில் இந்திய அணி வென்றது**.

## விருதுகள்

- தென் கொரியாவில் வழங்கப்படும் மிக உயரிய விருதுகளில் ஒன்றான **சியோல்** அமைதி விருது பிரதமர் மோடிக்கு வழங்கப்பட்டுள்ளது.
  - சர்வதேச ஒத்துழைப்பில் அவரது பங்களிப்பையும், சிறப்பான முடிவுகள் மூலம் சர்வதேச பொருளாதார வளர்ச்சிக்கு உதவிகரமாக இருந்தது அகியவற்றைப் பாராட்டி இந்த விருது அளிக்கப்பட்டது.

## நியமனங்கள்

- இந்திய வருவாய்ப் பணி அதிகாரியான **பிரமோத் சந்திர மோடி** மத்திய நேரடி வரிகள் வாரியத்தின் (CBDT – Central Board of Direct Taxes) தலைவராகப் பொறுப்பேற்றார்.
  - **CBDT** என்பது வருமான வரித்துறையின் கொள்கைகளை உருவாக்கும் ஒரு அமைப்பாகும்.

- சென்னை உயர்நீதிமன்றத்தின் கூடுதல் நீதிபதியாக **செந்தில்குமார் ராமமூர்த்தி** நேற்று(22.02.2019) பொறுப்பேற்றுக் கொண்டார்.

- **உத்திரப்பிரதேச அரசின் பசு பாதுகாப்பு அமைப்பின் தூதராக, ஹேமமாலினி**(நாடாளுமன்ற உறுப்பினர்) நியமிக்கப்பட்டுள்ளார்.

We Shine Academy™